# தென்பகுதியில் இராணுவத்தால் கைதான ஒரு லட்சம் சிங்களவர்களை காணவில்லை!

(லண்டன்)

அரச விரோத சக்திகள் என்ற சந்தேகத்தின் பேரில் கைதுசெய்யப்பட்ட சுமார் ஒரு லட்சம் பேர், தென்பகுதியில் மர்மமான முறையில் மறைந்துள்ளதாகப் பெற்றோர்கள் கழகம் சர்வதேச மனித உரிமை ஸ்தாபனத்திற்கு முறையீடு செய்துள்ளது.

இதேவேளையில் சுமார் 12 ஆயிரத்திற்கு மேற்பட்டோர் அரச விரோத சக்திகளாகச் சந்தேகிக்கப்பட்டு மறைந்துள்ளனர் என்றும், 7,500 பேர் தடுப்புக் காவலில் உள்ளனர் என்பதை அரச தரப்பில் தகவல் அளிக்கப்பட்டுள்ளதாக மனித உரிமை ஸ்தாபன அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

அரசவிரோத சக்திகளை அழித்தொழிக்கும் சட்ட விரோத பணியில் தீவிரமாக ஈடுபடுத்தப்பட்ட விசேட அதி

(4-ம் பக்கம் பார்க்க)

விலை ரூபா 3-50

# ஈழநாடு

THE EELANADU
NATIONAL TAMIL DAILY

மலர்: 32 புரட்டாதி: 31 றபீஉல் அவ்வல் பிறை: 27 இதழ்: 175
யாழ்ப்பாணம் புதன்கிழமை 17-10-1990

## ஈழத் தமிழ் மக்களின் இன்னல்கள் தொடர்பாக மண்டேலாவுக்கு மகஜர்

(புதுடில்லி)

இலங்கையில் சிறுபான்மையினரான தமிழ்மக்கள் படும் இன்னல்கள் குறித்து, ஆபிரிக்கக் கறுப்பினத் தலைவர் திரு. நெல்சன் மண்டேலாவுக்கு மகஜர் ஒன்றைச் சமர்ப்பிக்க, தமிழகக் கட்சி ஒன்று விரிவான அறிக்கையினை தயாரித்து வருவதாக ஏஜென்ஸி செய்தி ஒன்று தெரிவித்துள்ளது.

இந்தியாவுக்கு விஜயஞ்செய்துள்ள திரு. மண்டேலா 5 நாட்கள் அங்கு தங்கியிருக்கும்

(4-ம் பக்கம் பார்க்க)

★ பலாலியில்

# விடுதலைப் புலிகள் தாக்குதல்

# படையினருக்கு பலத்த சேதம்!

(யாழ்ப்பாணம்)

**பலாலியில் இராணுவத்தினருக்கும் விடுதலைப் புலிகளுக்குமிடையில் நேற்று நடைபெற்ற மோதலில் படையினர் தரப்பில் பலத்த உயிர்ச்சேதம் ஏற்பட்டுள்ளதுடன் பலர் காயமடைந்துமுள்ளனர்.**

நேற்றுக்காலை தொடக்கம் இச்செய்தி அச்சுக்குப்போகும் வரை இரு பகுதியினருக்குமிடையில் சண்டை நடைபெற்றுக்கொண்டிருந்தது.

படையினருக்கு உதவியாக ஹெலிகொப்டர், மற்றும் விமானங்கள் விடுதலைப் புலிகள் நிலைமீது தாக்குதல் நடத்தியது.

இந்த மோதலில் படையினர் தரப்பில் உயிர்ச்சேதம் ஏற்பட்டதாகவும் நான்கு படையினர் காயமடைந்துள்ளதாகவும்ஏஜென்ஸி செய்திகள் தெரிவிக்கின்றன.

## திருமலையில் — 4 இராணுவம் பலி

(திருமலை)

திருமலையில் விடுதலைப்புலிகளுக்கும் சிங்கள இராணுவத்தினருக்கும் இடையில் நேற்று முன்தினம் ஏற்பட்ட மோதலில் 4 இராணுவத்தினர் கொல்லப்பட்டனர். இச்சம்பவத்தின்போது பெருமளவான ஆயுதங்களும் விடுதலைப் புலிகளினால் மீட்கப்பட்டது.

திருமலை கட்டைபறிச்சான் ஸ்ரீலங்கா இராணுவ முகாமிலிருந்து இராணுவத்தினர் ஜீப்வண்டியொன்றில் வெளி

(4-ம் பக்கம் பார்க்க)

## பலாலி முகாமில் இராணுவத்தினர் குவிப்பு

காங்கேசன்துறை)

பலாலி இராணுவ முகாமில் மேலதிக இராணுவமும் இராணுவ தளபாடங்களும் கொண்டுவந்து குவிக்கப்பட்டுள்ளதாக ஊகிக்கப்படுகிறது

கடந்த சில தினங்களாக பாரிய விமானங்கள்பலாலிக்கு வந்து திரும்பிச் சென்றதையும் அவை வந்து திரும்பும்போது ஹெலி கோப்டர்கள் பாதுகாப்பு அளித்து ரோந்து சுற்றுவதையும் அவதானிக்கமுடிந்தது.

இதையடுத்து பலாலி காங்கேசன்துறை இராணுவமுகாம் பகுதிகளில் தற்போது தாக்குதலும் அதிகரித்துள்ளது. (86)

## வடக்கு-கிழக்குசெய்திகளுக்கு இந்தியா இருட்டடிப்பு

(பாரிஸ்)

இலங்கையின் வடக்கு-கிழக்குப் பகுதிகளில் இடம்பெறும் இராணுவ நடவடிக்கைச் செய்திகளை இந்தியா இருட்டடிப்புச் செய்துவருவதாக வெளிநாட்டுச் செய்தியாளர் ஒருவர் பாரிஸில் தெரிவித்துள்ளார்.

இலங்கையில் இனப்படுகொலை நடைபெறுவதைக் காரணம் காட்டி, பல வெளிநாடுகளும் இதில் தலையீடு செய்யக்கூடாது என்பதற்காகவே இந்தியா இவ்விதம் நடந்துகொள்வதாகவும் அவர்

(4-ம் பக்கம் பார்க்க)

## ஊரடங்கு அமுல்

(யாழ்ப்பாணம்)

தீவுப்பகுதியிலும் யாழ். உதவி அரசாங்க அதிபர் பிரிவிலும் நேற்று அதிகாலை முதல் காலவரையற்ற ஊரடங்கு உத்தரவை ஸ்ரீலங்கா அரசு அமுல்படுத்தியது.

தீவுப்பகுதியில் ஊர்காவற்றுறை, புங்குடுதீவு, மண்டைதீவு, காரைநகர் பகுதிகளிலேயே ஊரடங்கு உத்தரவு அமுல்படுத்தப்பட்டுள்ளது.

## வலி. வடக்கில் — உக்கிரமானவிமானதாக்குதல் வீடுகள், கட்டடம்முற்றுகசேதம்

(மாவிட்டபுரம்)

வலிகாமம் வடக்குப் பகுதியில் நேற்றுக் காலை முதல் (சி)மாலை வரை உக்கிரமான விமானக் குண்டுத் தாக்குதல் நடத்தப்பட்டது.

இத்தாக்குதலினால் வீடுகள், கட்டடங்கள் பல முற்றுகச் சேதம் அடைந்தன.

வலி. வடக்குப் பகுதியையே அதிரவைக்குமளவுக்கு நேற்றுப் பிற்பகல் பலாலி, காங்கேசன்துறைப் பகுதிகளில் விமானக்குண்டுத் தாக்குதல்கள் நடந்தன.

நேற்றுக் காலைமுதல் நண்பகல் வரை கட்டுவன், ஏழாலை குரும்பசிட்டி, தெல்லிப்பழை, மாவிட்டபுரம். காங்கேசன்

(4-ம் பக்கம் பார்க்க)

## ஆஸ்பத்திரி திருத்தவேலை துரிதம்!

(யாழ்ப்பாணம்)

யாழ்' போதனா வைத்தியசாலையின் திருத்த வேலைகள் இம்மாதம் 20ம் திகதிக்குமுன்பாக பூர்த்திசெய்யப்பட வேண்டும் என்று தற்போது திருத்தவேலைகளில் ஈடுபட்டுள்ள ஒப்பந்தகாரர்களுக்கு வலியுறுத்தப்பட்டுள்ளது. (வி)

## மூதூரில் — இராணுவத்தினர் சூடு நான்கு தமிழர் பலி

(திருமலை)

மூதூர் பகுதியில் இராணுவத்தினர்நேற்று மேற்கொண்டதாக்குதலில் நான்கு தமிழர்கள் கொல்லப்பட்டனர். இருவர் பலத்த காயமடைந்தனர்.

கட்டைபறிச்சான், சூரன்கல் பகுதியில் நடைபெற்ற தாக்குதல்களில் 11 இராணுவத்தினர் கொல்லப்பட்டதையடுத்தே மேற்படி தாக்குதல் நடாத்தப்பட்டுள்ளது.

டிராக்டர் ஒன்றில் வந்த பொதுமக்கள் மீதே இராணுவத்தினர் தாக்குதலை நடாத்தினர். இதில் நான்குபேர் ஸ்தலத்திலே பலியானுர்கள். இருவர் படுகாயமடைந்தனர். டிராக்டரும் தீவைக்கப்பட்டு கொளுத்தப்பட்டுள்ளது. (சி)

## ஊர்காவல்படை அச்சுறுத்தல் கிழ. தமிழர் வெளியேற்றம் 75,000 பேர் காடுகளில் தஞ்சம்

[மட்டக்களப்பு]

மட்டக்களப்பு. அம்பாறை மாவட்டத்தில் முஸ்லிம் ஊர்காவல் படையினரின் தொடர்ச்சியான கடும் அச்சுறுத்தலையடுத்து ஆயிரக்கணக்கில் தமிழர்கள் தொடர்ந்தும் காடுகளில் தஞ்சமடைய வேண்டிய நிலை ஏற்பட்டுள்ளது.

இராணுவத்தினரின் உதவி

(4-ம் பக்கம் பார்க்க)

# இராணுவத்தினரும், பொலிஸாரும் 'சென்றி'களில் தனித்தனியாக

# தங்கியிருந்த தடயங்கள் காணப்பட்டன!

## யாழ். கோட்டைக்குள் 3 மணி நேரம் - 2

யாழ். கோட்டையின் மொத்த அளவு 14 ஏக்கர். அகழிக்கு வெளிப்புற சுற்றளவு ஒரு மைல் நீளம். உட்புற சுற்றளவு முக்கால்மைல்நீளமாகும்.

நாங்கள் மேற்பகுதிக்கு வந்து முதலில் உட்புறமாக இராணுவத்தினரின் சென்றிகளை பார்வையிட்டோம்.

பத்திரிகையாளர் இருபிரிவுகளாக பிரித்து சென்றோம், காரணம் ஒரு அடிபாதை மட்டுமே துப்பரவு செய்யப்பட்டிருந்தது. மற்றப்பகுதிகள் எல்லாம் புல் வளர்ந்திருந்தது. எங்களுடன் வந்த வழிகாட்டிகள் அந்த ஒரு அடிபாதையினுல் மட்டுமே நடந்து வரும்படி கூறினுர்கள். மற்றப்பகுதிகளில் இன்னும் மிதிவெடிகள் அகற்றும் வேலைகள் நடைபெறவில்லை என்று தெரிவித்தனர்.

எங்கள் பிரிவுக்கு வழிகாட்டியான பீட்டர் முன்செல்ல நாங்கள் அவரை தொடர்ந்தோம்.

இராணுவத்தினரின் சென்றி ஒன்று எதிர்ப்பட்டது. அதற்குள் சென்று பார்வையிட்டோம். இரண்டு இரும்பு கட்டில் போடப்பட்டிருந்தது. நிலத்தில் அங்குமிங்குமாக நூற்றுக்கணக்கான பாவித்த துப்பாக்கி ரவைகள். சற்று தூரத்தில் 'ஷெல், குழாய்கள் சிதறிக் கிடந்தன.

### பல்வேறு பொருட்கள்

கோப்பை, சப்பாத்து, சிகரட் பெட்டி, கிறீம் கிராக்கர் பிஸ்கட் உறைகள், குளுக்கோஸ் உணவுகள் இப்படி பலவகைப்பட்ட பாவனைப் பொருட்களும் சிதறிக்கிடந்தன. அந்த 'சென்றி'யின் உயரம் 6 அடி. நீளம் 8 அடியிருக்கும். அகலம் 5 அடி. அதற்குள் 2 பேர் மட்டும் இருந்திருக்கவேண்டும். கடுதாசி கூட்டங்களும், கரம் போர்ட்விளையாடும்காய்களும் காணப்பட்டன.

படப்பிடிப்பாளரான தேவா நிலத்தில் விழுந்து சிதறிகிடந்த சன்னங்களை பொறுக்கி எடுத்து பார்த்தபோது எங்களுடன் வந்த வழிகாட்டி பீட்டர் ஒவ்வொரு சன்னத்தை பற்றியும் விளக்கம் தந்தார். எந்தெந்த துப்பாக்கிகளுக்கு பாவிப்பதென்றெல்லாம் தெரிவித்தார். அவ்வளவு நுணுக்கமாக அறிந்து வைத்திருக்கிறுர் அவர்.

### கோட்டை தூக்குமரம்

அங்கிருந்து வெளியேறி வந்தபோது கோட்டை தூக்குமரம் காணப்பட்டது. அதனை பார்த்தவாறு முனைப்பகுதிக்கு சென்றோம். அதிலும் ஒரு சென்றி அமைக்கப்பட்டிருந்தது. அதிலிருந்து நகரத்தை பார்வைட்டபோது ஸ்ரேடியம், பொலிஸ் விடுதிகள் தெளிவாக தெரிந்தது. அதற்கப்பால் குருநகர் கடற்கரை பகுதிகள். அங்குகூட மனித நடமாட்டம் எதுவுமே தென்படவில்லை. வீதிகளில் வாகனங்கள் கூட இல்லை. ஒரு சில சைக்கிள் பயணிகள் மட்டும் தூரத்தில் காணப்பட்டனர்.

### இராணுவம் கடமை

கோட்டை முற்பகுதி சென்றிகளில் எல்லாம் இராணுவத்தினர் கடமையாற்றியிருக்க வேண்டும். அங்கு சிங்கள பத்திரிகைகளும், சிங்கள விலாசமிடப்பட்ட கடித உறைகளும் காணப்பட்டன. பண்ணை பாலப்பகுதி சென்றியில் பொலிஸார் கடமையாற்றிய அறிகுறிகள் காணப்பட்டன. அந்த சென்றிக்குள் உள்ள மெத்தைகளில் 'பொலிஸ்' என ஆங்கிலத்தில் எழுதப்பட்டிருந்தது.

பொலிஸாரும், இராணுவத்தினரும்தனித்தனியாகவே இங்கு சென்றிகளில் கடமையாற்றியிருக்கிறுர்கள் போல் தெரிகிறது. பொலிஸாரில் அநேகமானேர் தமிழர்கள், சில முஸ்லிம்களும் உண்டு, ஆனுல் இராணுவத்தில் முழுக்க முழுக்க சிங்களவர்கள் தான். போர் ஆரம்பிக்கப்பட்டபின்னர் இவர்கள் தனித்தனியாகவே கடமைகளில் ஈடுபட்டிருக்கவேண்டும்.

**கா. யோகநாதன்**

### மழைக்கு ஒதுங்க

நண்பகல் போல் திடீரென வானம் கறுத்தது. மழை வரும் அறிகுறிகள் தோன்றின. மழைக்குஒதுங்குவதற்கு சென்றியை தவிரவேறு இடம் எதுவுமே மேல் பகுதியில் இல்லை.

எங்கள் பிரிவில் ஐந்துபேர் இருந்தோம். சிறிது நேரத்தில் மழைத்தூறல் ஆரம்பித்தது. இராணுவ சென்றிக்குள் ஒருவர் பின் ஒருவராகச்சென்றோம். 5 நிமிடம் வரை உள்ளே தங்கியிருந்தோம். மழை பலத்தது.

### சேறும் சுரியும்

சென்றியின் மூலைப்பகுதிக்குள் சென்று அகழியைப் பார்வைட்டேன். நீர் தெளிவாக இல்லை. ஒரே சேறும்சுரியுமாக காணப்பட்டது. அப்போது இந்த அகழி சேருக மாறிய சம்பவம் ஞாபகத்திற்கு வந்தது.

1930 ம் ஆண்டளவில் கோட்டையில் ஒரு பகுதியில் கைதிகளுக்கு இடம் ஒதுக்கப்பட்டிருந்தது. விளக்க மறியல் கைதிகளும் அங்குதான் பாதுகாப்பில் வைக்கப்பட்டனர். அப்போது சிறைச்சாலை அதிபராக ஒரு வெள்ளைக்காரர் தான் இருந்தார்.

காலைச் சாப்பாட்டு நேரம் ஒரு விளக்கமறியல் கைதியை காணவில்லை. கோட்டை எங்கும் தேடிப்பார்த்தார்கள். பயனில்லை. உடனே அந்த கைதியின் விலாசத்தை அறிந்து கொண்டு அந்த வெள்ளைக்காரரான சிறைச்சாலை அதிபர் அந்த கைதியின் வீட்டிற்கு சென்றுவிட்டார்.

அப்போது அந்த கைதி கிணற்றடியில் நீராடிக்கொண்டிருந்தார். அந்த வெள்ளைக்காரர் நேராக கிணற்றடிக்கு சென்று அந்த கைதிக்கு கைலாகு கொடுத்து கோட்டையை முறித்து விட்டீரே என்று பாராட்டினுர்.

கோட்டையிலிருந்து எப்படி தப்பியதாக கைதியிடம் அவர் கேட்டபோது நேரில் தான் விளக்கவேண்டும் என்று அந்தக்கைதி கூறவே எல்லோரும் கோட்டைக்கு புறப்பட்டனர்.

### அகழிக்குள் நீந்தி

கோட்டைக்குள் சென்றதும் அந்த கைதி அகழிக்குள் குதித்து நீந்தி பண்ணைக் கடலுக்கு சென்று வெளியேறினுர். இதனை அந்த சிறைச்சாலை அதிபரும் ஊழியரும் கோட்டையின் மேற்பகுதியில் நின்று பார்வையிட்டனர்.

'சரவணமுத்து' என்ற அந்தக் கைதிக்கு பின்னர் 'கோட்டை முறித்த சரவணமுத்து' என்ற பெயர் நிலைத்து விட்டது.

இதன்பின்னர் கோட்டையைச் சுற்றியுள்ள அகழிக்குள் கடலிலிருந்து சேறும் சுரியும் கொண்டுவரப்பட்டு நிரப்பப்பட்டது. அந்த சேற்றில் எவர் விழுந்தாலும் உயிருடன் தப்பி வரமுடியாது.

இந்த சேறுபோடும் வேலையில் கைதிகள் ஈடுபட்டிருந்தனர். அப்போது கோட்டையில் சிங்கள கைதிகளும் இருந்தனர். சில சிங்கள அரசியல் கைதிகளும் இருந்தனர். அவர்களும் இந்த சேறு போடும் வேலையில் பங்குகொண்டனர். இந்த சம்பவத்தை அண்மையில் ஒரு பெரியவர் என்னிடம் தெரிவித்தார்.

மழை விட்டதும் சென்றியிலிருந்து வெளியேறினேம். அந்த 5 நிமிடமே அந்த சிறிய சென்றிக்குள் இருக்க பெரும்பாடாக இருந்தது.

### வாசலில் புலிக்கொடி

கோட்டை முன் வாசலில் பெரிய புலிக்கொடி ஒன்று கம்பீரமாக பறந்துகொண்டிருந்தது. கடந்த 300 ஆண்டுகளாக போத்துக்கேயர், ஒல்லாந்தர், ஆங்கிலேயர், இந்திய அமைதிப்படையினர், சிங்களவர் கையிலிருந்த கோட்டை இன்று தமிழர் கையில் இருப்பது ஒவ்வொரு தமிழருக்கும் பெருமை தரக்கூடியதாகும்.

### அகழிக்குள் கற்கள்

கோட்டை வாசல் பகுதியில் உள்ள அகழிக்குள் இடிபாடுகளின்போது பிரிந்துவிழுந்த கற்கள் போடப்பட்டுவருகின்றது. இந்த அகழி கற்களால் நிரப்பப்பட்ட பின்னர் அதனுல் போய்வரமுடியும்.

இந்தக்கோட்டை 5 முனைகளைக் கொண்டு நட்சத்திர வடிவான அமைப்பில் கட்டப்பட்டுள்ளது. நாங்கள் இப்போது முதலாவது முனையைக் கடந்து வாசல் பகுதியில் நிற்கின்றோம். இன்னும் 4 முனைகளைக் கடந்து சென்ற பின்னர் தான் உட்பகுதிக்கு இறங்க முடியும். தேவாலயத்திற்கு அருகில் மேற்பகுதிக்கு வர ஒருவழிதான் உண்டு. அங்கிருந்து புறப்பட்டால் சுற்றிவந்து அந்த வழியினுல் தான் கீழே இறங்க முடியும்.

அந்த முக்கால்மைல் தூரத்தையும் மிதிவெடியில் சிக்காமல் மெதுவாக தப்பிவர சுமார் ஒருமணிநேரமாவது பிடிக்கும்.

அரைமணிநேரத்திற்கு முன்னர் தான் ஹெலி வந்து கோட்டைப் பகுதியைச் சுற்றி 5 கிரனைட்டுகளை வீசிவிட்டு சென்றிருந்தது. வழக்கமாக ஹெலிவந்து சென்றபின் இரு பொம்மர்கள் வரும். அதைத் தொடர்ந்து பெரிய விமானம் வரும். இவை எல்லாம் ஞாபகத்திற்கு வந்தது.

அடிக்கடி வானத்தைப் பார்த்துக் கொண்டு பலாலிப் பக்கத்தைப் நோக்கிக் கொண்டு முன்னேறுகிறேன்.

கீழே மிதிவெடி அபாயம். மேலே பொம்மரின் அபாயம்; இவையின் மத்தியில் கோட்டையின் உச்சியில் அகழிக்கு அருகில் உள்ள 18 அடிப்பகுதியில் ஒற்றைவழிப் பாதையால் மெதுவாக நகர்ந்து சென்று கொண்டிருக்கிறேம்.

### ஹெலி வந்தது

அப்போது நேரம் 12 மணியாகிறது. மிதிவெடியில் சிக்காமல் நிலத்தைப் பார்த்தபடி சென்று கொண்டிருந்த போது திருநெல்வேலிப் பக்கமாக ஹெலிச் சத்தம் கேட்கிறது; வானத்தைப் பார்க்கிறேன். கோட்டையை நோக்கி ஒரு ஹெலி வேகமாக வந்தபடியிருக்கிறது. மேற்பகுதியில் பாதுகாப்பான பதுங்கு குழி எதுவுமே இல்லை: இராணுவத்தினரின் 'சென்றி' மட்டும் தான். அது பாதுகாப்பானதாக இல்லை.

புலிகளின் 'ஷெல்' தாக்குதலினுல் இடிந்து விழுந்த கட்டடங்களின் பனை மரங்களை எடுத்து பாவித்து மேலே சீற் மட்டும் போட்டு அந்த சென்றியை அமைத்திருந்தார்கள். எந்தனையோ வீடுகளைத் தரை மட்டமாக்கிய ஹெலியின் குண்டுவீச்சுக்கு இந்த சென்றி தாக்குப்பிடிக்குமா?

கோட்டையின் கீழ்பகுதியில், பாதுகாப்பான இடங்கள் இருக்கிறது. உடனடியாக கீழ்ப்பகுதிக்கு இறங்கிச்செல்ல முடியாது. கோட்டையின் 4 முனைகளையும் கடந்து சென்று தேவாலயத்திற்கு அருகில் உள்ள படிகளால் தான் கீழே இறங்கமுடியும். ஒற்றையடிப் பாதையால் ஓடிச்சென்ருலும் ஒருமணி நேரமாவது பிடிக்கும். அதற்குள் ஹெலி வந்து சேர்ந்துவிடும்.

கோட்டையைநோக்கி வந்த அந்த 'ஹெலி' இடைவழியில் திரும்பி பலாலிப் பக்கமாக சென்றது. இப்போது தான்மனம்ஆறுதலடைந்தது.

கோட்டையின் முகப்பு பகுதியைக் கடந்து வந்தபோது நூற்றுக்கு மேற்பட்ட மக்கள் அகழிமதில் சுவரை இடிப்பதில் ஈடுபட்டுக் கொண்டிருந்தனர்.

(தொடரும்)

---

## வெடி தயாரித்த நால்வர் பலி!

(சென்னை)

தீபாவளி தினத்தை முன்னிட்டுதமிழ்நாட்டில் வெடித் தொழிற்சாலையொன்றில் திடீரென விபத்து ஏற்பட்டதில் நால்வர் அதே இடத்தில் மாண்டனர். பத்துக்கும் அதிகமானேர் படுகாயமடைந்தனராம். (வி)

## உ. அ. அதிபராக நியமனம்

(மானிப்பாய்)

சண்டிலிப்பாய் பிரிவு உதவி அரசாங்க அதிபராக திரு. ஏ. ஜி. சேகரம் நியமனம் பெற்றுள்ளார்.

இவர் முன்பு இவ்வலுவலகத்தில் பல வருடங்களாக நிர்வாக உத்தியோகத்தராக பணிபுரிந்தவரென்பது குறிப்பிடத்தக்கது.

## சிற்றூரவை அலுவலகம்

[பருத்தித்துறை]

பருத்தித்துறை வட்டவைப் பகுதிக்குட்பட்ட தும்பளை சிற்றூரவைக்கு அலுவககம் ஒன்று திறந்துவைக்கபபட்டுள்ளது. இத்திறப்புவிழா வைபவம் சிற்றூரவைத் தலைவர் திரு. எஸ். பாலசுந்தரம் தலைமையில் நடைபெற்றது. (52)

## துரிதகதியில் உணவுப் பெர்மிட் விநியோகம்

(யாழ்ப்பாணம்)

இடம்பெயர்ந்த அகதிகளுக்கான இலவச உணவு 3-ம் கட்ட விநியோக ''பெர்மிட்டுகள்'' துரிதகதியில் வழங்கப்பட்டு முடிவடையும் தறுவாயில் இருப்பதாக, ஈச்சமோட்டை, குருநகர்ப் பகுதி கிராமசேவையாளர் திரு. சொக்கலிங்கம் தெரிவித்தார்.

பொதுமக்களின் வசதி கருதிப் பல இடையூறுகளுக்கும் மத்தியிலும மேற்படி பெர்மிட்டுகளைப் பொதுமக்களுக்கு வழங்கிவருகின்றேம். ஆனுல் 3-ம் கட்ட உணவுப் பொருட்களை யாழ். ப. நோ. கூ. சங்கம் எப்போது வழங்கும் என்பது தமக்கு இன்னும் தெரியாது என அவர் மேலும் தெரிவித்தார். (வி)

## பொதுமன்னிப்பு

(கொழும்பு)

தீபாவளிப் பண்டிகையை முன்னிட்டு முந்நூறு கைதிகளுக்கு ஜனுதிபதி ஆர். பிரேமதாசா பொதுமன்னிப்பு வழங்கியுள்ளார். இக்கைதிகளின் சிறைத்தண்டனை குறைக்கப்பட்டிருப்பதுடன் மரணதண்டனை ஆயுள்தண்டனையாக மாற்றப்பட்டுள்ளதென நீதி அமைச்சு அறிவித்துள்ளது. (ச)

## எரிபொருள் விலைகள் அதிகரிப்பு

(கல்கத்தா)

இந்தியாவில் எரிபொருள்களின் விலை இருபத்தைந்து சதவீதத்தால் அதிகரிக்கப்பட்டுள்ளது.

மத்திய கிழக்கு நெருக்கடி காரணமாக எரிபொருள்களின் விலை அதிகரிக்கப்படுவதாக நிதியமைச்சர் திரு. மதுதண்டவதே நேற்றுமுன்தினம் அறிவித்துள்ளார். (ச)

## கண்காட்சி

(பண்டத்தரிப்பு)

வட்டுக்கோட்டை லயன்ஸ் கழகத்தின் ஆதரவில் மூளாய் கிராமிய உற்பத்திக்குழுநடாத்தும் கிராமிய உற்பதிபொருட்களின் கண்காட்சி இன்று 17ம் திகதி மூளாய் அமெரிக்க மிஷன் பாடசாலை மண்டபத்தில் நடைபெறவுள்ளது

ஐக்கிய நாணய சங்கத்தின் கருமபீடமும் முதலுதவி பற்றிய விளக்கமும் கவின்கலைப் பொருட்களின் கண்காட்சியும் கலைநிகழ்ச்சிகளும் இதில் இடம் பெறுமென்று தெரிவிக்கப்படுகின்றது. (72)

## வைத்தியசாலை சேதமடைந்தது

(புலோலி)

புலோலி மெதடிஸ்த மிஷன் தமிழ்க் கலவன் பாடசாலை மீது பொம்மர் விமானம் நேற்று முன்தினம் நடத்திய குண்டு வீச்சுத்தாக்குதலின் போது மந்திகை அரசினர் ஆதார வைத்தியசாலையும் சேதத்துக்குள்ளானது.

இத்தாக்குதலின் போது வைத்தியசாலையின் சத்திர சிகிச்சை நிலையத்தின் கிழக்குப் புற ஜன்னல் கண்ணுடிகள் நொருங்கின. அத்துடன்வைத்தியசாலைவளவின் ஏனையபகுதிகளிலும் குண்டுச்சிதறல்கள் வந்து விழுந்தன. (61)

பிரச்னேக்கு தீர்வு காண்பதற்கு

# போரை நிறுத்தி புலிகளுடன் அரசு பேச்சு நடத்தவேண்டும்

(மட்டக்களப்பு)

தமிழர் பிரச்சனைக்குத் தீர்வு காண வடக்கு கிழக்குப் பகுதிகளில் நடைபெற்றுவரும் யுத்தத்தை நிறுத்தி உடனடியாக தமிழீழ விடுதலைப்புலிகளுடன் அரசாங்கம் பேச்சு நடத்த வேண்டும் என்று தமிழ்-முஸ்லிம் பிரமுகர்கள் வேண்டுகோள் விடுத்துள்ளனர்,

தமிழ்-முஸ்லிம் மக்களின் நல்லெண்ணத்தை ஒருமுகப் படுத்துமுகமாக மட்டக்களப்பில் நடைபெற்ற சமாதான மாநாட்டில் இறுதியில் மேற் குறிப்பிட்ட வேண்டுகோள் தமிழ்-முஸ்லிம் பிரமுகர்களால் விடுக்கப்பட்டது.

மாநாட்டில் பேசிய பலரும், நாட்டின் அபிவிருத்தித்திட்டங்களை அமுல்படுத்தி சமாதானம் அமைதி நிலவவேண்டுமெனில் யுத்தத்தை இரு பகுதியினரும் நிறுத்தி பிரச்சனேக்கு அரசியல் தீர்வு காண்பதற்கு பாடுபடவேண்டுமெனவும் கேட்டுக்கொண்டனர். (ச)

## மாட்டு வண்டில்கள் நவீனமயப்படுத்தப்படும்!

(சென்னே)

வண்டிகளில் பூட்டப்படும் எருது மாடுகளின் சுமையைக் குறைப்பதற்கு வசதியாக மாட்டுவண்டிகளே நவீன மயப்படுத்த இந்தியப் பிராணிகள் நலவாரியம் நடவடிக்கை எடுத்துவருகின்றது,

மாடுகள் பூட்டப்படும் நுகத்தடிகள், கயிறு ஆகியவற்றை நவீனமயப்படுத்துவதனுல் மாடுகளின் சுமையைக் குறைக்கலாமென இந் நலவாரியத்தின் தலேவர் சென்னேயில் தெரிவித்தார். (ச)

## முதலாந்தர அதிபர்களாக பதவி உயர்வு

(வட்டுகோட்டை)

வட்டுக்கோட்டைத் தொகுதியில் நான்கு ஆசிரியர்கள் முதலாந்தர அதிபர்களாகப் பதவி உயர்வு பெற்றுள்ளனர்.

1988ம் ஆண்டு நடாத்தப் பட்ட போட்டிப் பரீட்சைப் பெறுபேறுகளுக்கமைய இலங்கைப் பாடசாலே அதிபர் சேவைதரம் ஒன்றிற்கு இவர்கள் பதவி உயர்வு செய்யப் பட்டுள்ளனர்.

அராலி இந்துக்கல்லூரியில் அதிபராகக் கடமையாற்றிய திரு.எஸ்.செல்வராசா, காரைநகர் யாழ்ரன் கல்லூரி விரிவுரையாளர் திரு. நா. ஜெபநாயகம், சங்கானே சிவப்பிரகாச மகாவித்தியாலயத்தில் அதிபராகக் கடமையாற்றிய திரு. கா. சந்திரபாலன், பண்ணுகம் வடக்கு ஆறுமுக வித்தியாலயத்தில் அதிபராகக் கடமையாற்றிய திரு. எஸ். சண்முகலிங்கம் ஆகிய நால்வருமே முதலாந்தர அதிபர்களாகப் பதவி உயர்வு பெற்றுள்ளனர்.

இவர்களுக்கான நியமனக் கடிதங்கள் கல்விச் சேவைக் குழுவினுல் அனுப்பிவைக்கப் பட்டுள்ளன. (139)

## கர்நாடகத்தில் மக்கள் ஆட்சி ஏற்படும்

(புதுடில்லி)

கர்நாடகத்தில் காங்கிரஸ் கட்சி புதிய தலேவரைத் தெரிவித்துள்ளதால் அங்கு விரைவில் மக்களால் தெரிவு செய்யப்பட்டுள்ள அரசாங்கம் பதவியேற்கும். இது கர்நாடக ஆளுநரின் அறிக்கை கிடைத்ததும் சாத்தியமாகும்''

இவ்வாறு பிரதமர் வி. பி. சிங் வெளியிட்ட அறிக்கையில் தெரிவித்தார்.

தற்போது கர்நாடக காங்கிரஸ் கட்சிப் புதிய தலேவராக திரு. பங்காரப்பாவைத் தெரிவுசெய்து ஜனுதிபதிக்கு தெரிவித்துள்ளதால் விரைவில் மக்களால் தெரிவுசெய்யப் பட்ட கர்நாடக மாநில அரசு பதவியேற்கும் என அவர் தெரிவித்தார். (ச)

## வகுப்புகளே நடத்த முடிவு

(தென்மராட்சி)

கொடிகாமம் திருநாவுக்கரசு மகாவித்தியாலய வகுப்புகளே தொடர்ந்து நடத்துவதென அங்கு நடைபெற்ற ஆலோசனேக்கூட்டமொன்றில் தீர்மானிக்கப்பட்டது.

இந்த ஆலோசனேக் கூட்டம் திருநாவுக்கரசு மகாவித்தியாலயத்தில் அதிபர் சின்னத்தம்பி தலேமையில் நடைபெற்றது. பெற்ருேரும், ஆசிரியர்களும் கலந்துகொண்டனர்.

## இராசி பலன்

17 - 10 - 1990

புதன்கிழமை

சதுர்த்தசி மு. இ. 8. 07 வரை; அத்தம் முழுவதும்.

ராகுகாலம் பகல் 12-02 முதல் 1. 32 வரை;

நல்ல நேரம் மாலே 4. 32 முதல் 6. 02 வரை தீபாவளிப் பண்டிகை.

மேடம்: கனவான் சந்திப்பு, குடும்ப மகிழ்ச்சி, மன நிறைவு, தவறிய பொருள் கிடைக்கும்.

இடபம்: மனச்சுமை, இல்லத்தில் வேற்றுமை, பணச் செலவு, சகோதர உதவி.

மிதுனம்: அதிர்ஷ்டம் நழுவுதல், தொழில் பிணக்கு, அதிகாரிகள் பகை, அவநம்பிக்கை.

கடகம்: கடமையுணர்வு, அந்நியர் நட்பு, தொழில் மாற்றம், குடும்பத்தில் குதூகலம்.

சிங்கம்: பயனற்ற செயல், வீண் விரோதம், குடும்பத்தில் குழப்பம், பயணம்.

கன்னி: எண்ணியது கைகூடும், மனச் சந்தோசம், குடும்ப மகிழ்ச்சி, பாராட்டு.

துலாம்: தடுமாற்றம், பகைவர் தொல்லே, மங்களகரமான சுபகாரியம், விருந்துபசாரம்.

விருச்சிகம்: சென்ற இடத்தில் சிறப்பு, அறிஞர் பாராட்டு, பணலாபம், நண்பருதவி.

தனுசு; தொழில் போட்டி வேண்டியவரைப் பகைத்துக் கொள்ளல், அலேச்சல் மிகுதி.

மகரம்: கடன் தொல்லே, மனவிகாரம், குடும்பச் சச்சரவு, நோய் வாட்டும்.

கும்பம்: ஏமாற்றம், சிறு பிணி, குடும்பத்தில் பூசல், தொழில் பிணக்கு.

மீனம்: மனநிறைவு, தாய்வழி உதவி, நற்செய்தி, தொழில் சிறப்பு. அமைதி.

ஜோஸ்யர்.

## பயிரழிவில் ஈடுபடும் கட்டாக்காலிகளுக்குதண்டம்

(பண்டத்தரிப்பு)

பயிரழிவில் ஈடுபட்டுவரும் கட்டாக்காலிகள் பிடிக்கப் பட்டு பயிர் சேதத்திற்கேற்ப தண்டம் அறவிடப்பட்டுவருகிறது,

ஆடுகளே அவிழ்த்து விட்டு அயல் காணிக்காரரின் பயிர் அழிவுக்கு காரணமாக இருந்த இளவாலே மாரீசன்கூடல் என்ற இடத்தைச்சேர்ந்த ஒருவருக்கு தமிழீழ விடுதலேப் புலிகள் மக்கள் முன்னணி பண்டத்தரிப்பு பிரதேச பொறுப்பாளரினுல் குற்றப் பணம் விதிக்கப்பட்டது.

நெற்பயிர்க் காணியின் உரிமையாளர் செய்தமுறைப்பாட்டை அடுத்து இக்குற்றப் பணம் அபராதமாக விதிக்கப் பட்டது. (72]

## தபால்சேவை சீரில்லே பொதுமக்கள் பாதிப்பு

(மாங்குளம்)

முல்லேத்தீவில் தபால்சேவை சீரில்லாததால் பொதுமக்கள் பெரும் சிரமத்திற்குள்ளாகி வருகிருர்கள்.

இராணுவ நட்வடிக்கை ஆரம்பிக்கப்பட்டதையடுத்து தபாலகங்கள் சீராக இயங்காததாலும் தபால் முத்திரைகள் இல்லாததாலும் தபால்கள் சேகரிப்பு, பட்டுவாடா செய்யப்படாததாலும் இப்பகுதியிலுள்ள படித்தவர்கள் வேலே வாய்ப்புக்கு விண்ணப்பிக்க முடியவில்லே.

கொழும்பிலிருந்து வந்த தபால் பொதிகளும் பட்டுவாடாசெய்யாமல் அங்காங்கே தேங்கிக் கிடக்கின்றன. (105)

## தீவுப்பகுதி தபால் ஊழியருக்கு சம்பளம் வழங்கப்படவில்லே

(புங்குடுதீவு)

புங்குடுதீவு, வேலணே, நயினுதீவு, நெடுந்தீவு ஆகிய பகுதிகளிலுள்ள தபால் ஊழியருக்கு இதுவரைக்கும் சம்பளம் வழங்கப்படவில்லே எனப் புகார் தெரிவிக்கப்படுகிறது.

இவர்களுக்கான ஆகஸ்ட், செப்டம்பர் மாதத்திற்கான காசோலேகள் ஏற்கனவே வழங்கப்பட்டுள்ளது. ஆனுல் அக்காசோலேகளே மாற்றமுடியாத நிலேயில் அவர்கள் உள்ளனர். (101)

## ஐ. நா. அதிகாரி உடன் நடவடிக்கை

(யாழ்ப்பாணம்)

''பல ஆயிரக்கணக்கான அகதிகளின் பாதுகாப்புக் குறித்து நேரடியாகத் தலேயிட முடியாவிட்டாலும், இதுபற்றி ஐ. நா. பாதுகாப்பு சம்பந்தப் பட்ட ஸ்தாபனந்துக்கு (யூ என். சி. எச். ஆர்.) வேறு வழிகளில் உடனுக்கு உடன் அறிவித்துநடவடிக்கைஎடுத்து வருகிருேம்.''

இவ்வாறு ஐக்கிய நாடுகள் உயர் ஸ்தானிகராலய அகதிகளுக்கான நிறுவன உயர் அதிகாரி கருத்து தெரிவித்துள்ளார்.

தமிழ் மாநில அகதிகள்பாதுகாப்பு மன்ற அமைப்பாளர் திரு.எஸ.கஜேந்திரநாத்தினுல் சமர்ப்பிக்கப்பட்ட மகஜருக்கு பதிலளிக்கையில் ஐ. நா. அகதிகள் உயர் ஸ்தானிகராலயத்தினுல் எடுக்கப்படக்கூடிய இயன்ற நடவடிக்கையைதாம் எடுப்பதாகவும் அவர் மேலும் தேரிவித்தார். (153)

## முத்திரைக்கு தட்டுப்பாடு

(பருத்தித்துறை)

வடமராட்சிப்பகுதியில் முத்திரைகளுக்குப் பலத்த தட்டுப்பாடு ஏற்பட்டுள்ளது. இதனுல் இப்பகுதி மக்கள் பலத்த கஷ்டங்களே அனுபவித்துவருகின்றனர். (52)


## UNIVERSITY OF JAFFNA, FACULTY OF AGRICULTURE, KILINOCHCHI.

Applications will be received by me from suitable candidates for the following posts upto 1990.10.29

TEMP. INSTRUCTOR IN ENGLISH

VISITING LECTURER IN MATHEMATICS

TEMP. LECTURER / VISITING LECTURER / DEMONSTRATOR IN AGRONOMY / AGRICULTURAL CHEMISTRY / AGRICULTURAL ECONOMICS / AGRICULTURAL BIOLOGY / ANIMAL SCIENCE / AGRICULTURAL ENGINEERING

SALARY SCALE:

1. Temp. Instructor in English: Rs. 3,000/- (Fixed) p. m.
2. Temp. Lecturers: Rs. 3,900/- p. m. (Fix d)
3. Visiting Lecturers: Rs. 100/- per hour + Travelling allowance.
4. Temp. Demonstrator: 3,250/- p. m. (Fixed)

QUALIFICATIONS

1. INSTRUCTOR:

(1) (i) A degree of a recognised University; or

(ii) the First Class Trained Teachers' Certificate with at least 3years' experiene after training; or

(iii) the Specialist English Trained Teachers' Certificate with at least 3years experience after training; or

(iv) the Diploma or Certificate in the Teaching of English as a Second Language from the University of Colombo or an equivalent qualification obtained from a recognised University or other Institution after having satisfactorily completed a course of study of not less than ten months' duration.

and

(2) A very good command of Sinhala / Tamil and English.

2. TEMP. LECTURER

(1) (i) A First or Second Class (Upper Division) in a Special Degree in a relevant subject; cr

(ii) A Second Class (Lower Division) in a Special Degree in a relevant subject; or

(iii) Such professional qualifications as may be approved by the University Grants Commission upon the recommendation of the Higher Educational Institution concerned.

3. TEMPORARY DEMONSTRATOR

A graduate or a person awaiting results of a Final/Degree Examination.

Note:

Those who are sitting for a final examination in this year also can apply.

Applicants are requested to apply together with their Bio-datas. Qualified applicants are also requested to present for the interview scheduled to be held on 1990.10.31 at 10.00 a. m. in the Board Room of this University.

REGISTRAR

Uuiversity of Jaffna,
Thirunelvely,
Jaffna.
1990.10.15 (A 830)

# "மாவீரர் தினம் தமிழீழத்தின்தேசியதினமாக விடுதலைப்புலிகள் பிரகடனம்"

(யாழ்ப்பாணம்)

''மாவீரர் தினமாகிய நவம்பர் 27ந் திகதியை தமிழீழத்தின் தேசிய தினமாக தமிழீழ விடுதலைப் புலிகள் பிரகடனப்படுத்தியுள்ளார்ள்'' என்று விடுதலைப்புலிகள் மக்கள் முன்னணி பிரமுகர் திரு. தேவர் தெரிவித்தார்.

நேற்றுக்காலை யாழ். பல்கலைக்கழக கைலாசபதி அரங்கில் நடைபெற்ற கலந்துரையாடலில் அவர் இவ்வாறு தெரிவித்தார்.

திரு. தேவர் மேலும் அங்கு உரையாற்றுகையில் தெரிவித்ததாவது: ''ஒரு சுயாதீன நாட்டுக்குத் தேசியக்கொடி, தேசியகீதம், தேசிய இனம் என்ற முக்கியமான மூன்று மகிமையான அம்சங்கள் உண்டு. அந்த ரீதியில் தமிழீழத்தின் தேசிய தினமாக தமிழீழ மாவீரர் நாள் அமைகிறது.

''மாவீரர் தினம் நவம்பர் மாதம் 21-ம் திகதி ஆரம்பமாகி 27-ம் திகதிவரை அனுஷ்டிக்கப்படும்.''

''மாவீரர்களை நினைவு கொள்ளவும், இழந்துபோன தமிழீழ இறைமைக்கான போராட்டத்தை வெற்றி கொள்ளவும், மக்களை இணைத்துச் செல்வதற்கான கருத்துக்களை முன்வைக்கக்கூடியதுமான பல நிகழ்ச்சிகளைக் கொண்டும் தமிழீழம் விழாக்கோலம் பூண்டு நிற்கவேண்டும்.''

தமிழீழ தேசியக்கொடியேற்றத்துடன் மாவீரர் தினம் ஆரம்பமாகும்.

''மாவீர தினத்தின் இறுதி நாள் நவம்பர் 26-ம் திகதி இரவு 12-01 மணிக்கு ஆலயங்கள், தேவாலயங்கள் யாவற்றிலுமுள்ள பாரிய மணி ஓசைகளை எழுப்பி ஒரே சீராக மாவீரர் நினைவு ஒலி எழுப்பப்பட வேண்டும். இந்த மணி ஒலி 2 நிமிடங்கள் நீடிக்கும். இதன்போது மறைந்த மாவீரர்களுக்காக எழுந்து சகல சகலரும் மௌன அஞ்சலி செலுத்தவேண்டும். நினைவு ஒலி ஓய்ந்ததும் மாவீரர் சுடர் ஏற்றுவது ஆரம்பமாகும்'' என்றார். (153)

காரைதீவு-கல்முனையில்

# அதிரடிப்படையினர் சுட்டு 10 பொதுமக்கள் பலி!

(மட்டக்களப்பு)

காரைதீவு. கல்முனைப் பகுதிகளில் அதிரடிப் படையினர் பத்துத் தமிழர்களைச் சுட்டுக் கொன்றுர்கள்.

இங்குள்ள வாவி ஒன்றில் ரோந்து சென்ற படையினர் மீது இடம்பெற்ற தாக்குதலை தொடர்ந்தே அப்பாவிப் பொதுமக்கள் அதிரடிப் படையினரால் சுட்டுக் கொல்லப்பட்டதாகத் தெரியவருகிறது.

இப்பகுதிகளுக்குப் பெரும் தொகையான அதிரடிப் படையினர் கொண்டு வந்து குவிக்கப்பட்டு வருவதாகத் தெரியவருகிறது.

## போராளி பலி

(வவுனியா)

வவுனியா செட்டிகுளம் கந்தசாமி நகரில் நேற்றுமுன்தினம் காலை 5 மணியளவில் உழவு இயந்திரத்தில் சென்ற விடுதலைப்புலிகள் விபத்தொன்றில் சிக்கியதில் மயந்தன் என்பவர் மரணமானுர்.

இவருக்கு விடுதலைப்புலிகள் தமது வீர அஞ்சலியைத்தெரிவித்துள்ளனர். (வி)

### வடக்கு

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

தெரிவித்துள்ளார்.

இப்பிரச்சனையைத் தீர்க்க, அண்மைக் காலமாக ஆஸ்திரேலியப் பிரதமர் திரு.பொப் ஹொக் ஆர்வம் காட்டிவருவதையும், 'காமன்வெல்த்' இதில் தலையிடும் சாத்தியம் அதிகரித்துள்ளதையும் அவர் குறிப்பிட்டுள்ளார். (சி)

வலி. வடக்கில்

# தொடரும் தாக்குதலால் மக்கள் இடம்பெயர்வு

(காங்கேசன்துறை)

வலி.வடக்கில் தொடர்ந்து இடம் பெறும் தாக்குதல்கள் காரணமாக மேலும் பல

பொதுமக்கள் தமது இருப்பிடங்களை விட்டு வெளியேறும் நிலை ஏற்பட்டுள்ளது.

வலி. வடக்கில் கடந்த சில நாட்களாக ஹெலி தாக்குதலும் ''ஷெல்' தாக்குதலும் அதிகரித்து வருவதால் பதற்றநிலை ஏற்பட்டுள்ளது.

மாலிட்டபுரம் சந்திக்கு அப்பால் வசித்த மக்கள் பலரும் ஏற்கனவே இடம் பெயர்ந்துள்ளனர். தற்போது மாவிட்டபுரம் சந்திக்கும் தெல்லிப்பழைக்கும் இடையில் வசித்த மக்களிலும் பலர் இடம்பெயர ஆரம்துள்ளனர்.

அத்துடன் தெல்லிப்பழை சந்தி சுற்றுடலிலும் அடிக்கடி ஹெலி தாக்குதல் இடம் பெறுவதால் அங்கு வசித்த மக்களும் இடம் பெயர்ந்து அயற்கிராமத்துக்கு செல்கிறுர்கள்,

வீமன்காமம், தையிட்டி பகுதிகளிலும் பெரும்பாலான மக்கள் ஏற்கனவே இடம்பெயர்ந்திருந்தனர். ஆனுல் ஒருசிலர் அங்கேவசித்துவந்தனர். அவர்களும் தற்போது இடம்பெயர ஆரம்பித்துள்ளதாகக் கூறப்படுகிறது. (86)

### திருமலை

(1ம் பக்கத் தொடர்ச்சி)

யேறியபோது விடுதலைப்புலிகள் இடைமறித்து தாக்கியதில் ஜீப் வண்டியில் வந்த 4 இராணுவத்தினரும் கொல்லப்பட்டதுடன் ஜீப்வண்டியும் தீயிட்டுக் கொளுத்தப்பட்டதாக தெரிவிக்கப்படுகின்றது. [வி]

வவுனியாவிலிருந்து

# கொழும்புக்கு தினசரி இரு ரயில் சேவை

(வவுனியா)

வவுனியாவில் இருந்து கொழும்புக்கு தினசரி இரண்டு ரயில் சேவைகள் நடாத்தப்பட்டுவருகிறது. இச்சேவை நேற்று முன்தினம் முதல் ஆரம்பமாகியுள்ளது. காலை 8-30 க்கும் பகல் 12-30 க்கும் இரண்டு சேவைகள் வவுனியாவில் இருந்து கொழும்புக்கு நடைபெறுகின்றன.

யாழ்பாணத்திலிருந்து கொழும்பு செல்பவர்கள் தொகை தினமும் அதிகரித்து வருவதால் இவ் ஏற்பாடு செய்யப்பட்டிருப்பதாக ரயில்வே திணைக்கள அதிகாரி தெரிவித்துள்ளார்.

யாழ். நகரில் நேற்று

# அரச திணைக்களங்கள் எதுவும் இயங்கவில்லை

(யாழ்ப்பாணம்)

ஸ்ரீலங்கா அரசாங்கத்தின் திடீர் ஊரடங்கு உத்தரவை அடுத்து, யாழ். நகரில் சகல பாடசாலைகள், அரசாங்கச் செயலகம், வங்கிகள், தபால் அலுவலகங்கள் உட்பட அனைத்து நிறுவனங்களும் செயல் இழந்து காணப்பட்டன.

நீண்டகால இடைவெளிக்குப் பின்னர், வங்கி மற்றும் அரச நிறுவனங்களுடன் தொடர்புகொள்ள அவசரம் அவசரமாக வந்து குவிந்த பொதுமக்கள், ஏமாற்றத்துடன் திரும்பவேண்டியிருந்தது.

யாழ். நகரிலுள்ள பாடசாலைகளில் ஊரடங்கு உத்தரவு தளர்த்தப்படும் வரை பாடசாலைகள் இயங்கமாட்டாது என்று அறிவித்தல் பலகையில் தெரிவிக்கப்பட்டிருந்தது.

தூர இடங்களிலிருந்து யாழ். நகருக்கு வந்த வங்கி வாடிக்கையாளர்கள் காலை 10-00 மணி வரையும் வங்கிகள் முன்பாக நின்று ஏமாற்றத்துடன் திரும்பிச் சென்றனர்.

நகரிலுள்ள பாடசாலைகளுக்கு வந்த ஆசிரியர்களும், மாணவர்களும் பாடசாலை நடைபெறுத காரணத்தால் திரும்பிச் சென்றனர். (153

# தீபாவளிப் பண்டிகை இம்முறை சோபிக்கவில்லை

(யாழ்ப்பாணம்)

சிறிலங்கா படைகளின் தொடர்ச்சியான தாக்குதலினுல் யாழ். நகரில் இம்முறை தீபாவளிப் பண்டிகை சோபிக்கவில்லை.

தீபாவளிப் பண்டிகையின் போது எப்பொழுதும் களை கட்டியிருக்கும் யாழ். நகரிலுள்ள வர்த்தக நிலையங்கள் யாவும் இடிந்துபோயுள்ளதாலும் சன நடமாட்டமில்லாமையாலும் தீபாவளிப் பண்டிகை பொலிவிழந்து காணப்படுகிறது.

தீபாவளி பண்டிகைக்கான உடுபிடவைகள் புதிய புதிய டிசைன்கள் இந்தியாவில் வெளியானபோதும் தமிழ்ப் பிரதேசங்களில் பிடவைக் கடைகளில் பிடவைகளின் விலைகள் அதிகமாக இருக்கிறது.

## நேற்று சில பகுதிகளுக்கு மின் விநியோகம்

(யாழ்ப்பாணம்)

யாழ். மாவட்டத்தின் சில பகுதிகளுக்கு நேற்று மின்சார விநியோகம் இடம்பெற்றது.

வட்டுக்கோட்டை, மாவடி, சித்தன்கேணி, சங்கானை: மானிப்பாய், உடுவில், சண்டிலிப்பாய் ஆகிய பகுதிகளுக்கு இந்த மின் விநியோகம் வழங்கப்பட்டது.

### ஊர்காவல்படை

(1ம் பக்கத் தொடர்ச்சி)

யுடன் தமிழ் கிராமங்களுள் நுழையும் ஊர்காவல் படையினர், பலரை அழைத்துச் செல்வதும் பின் அவர்கள் காணுமல் போவதும் வழமையான நிகழ்வுகளாகி விட்டதாம்.

இதையடுத்து சுமார் 75,000 தமிழர்கள் காடுகளில் தஞ்சமடைந்துள்ளனர். போதியளவு உணவு இல்லாததால் பலர் பட்டினியால் மரணமடைந்துள்ளதாகவும் தெரிவிக்கப்படுகிறது. [சி)

இப் பத்திரிகை 'ஈழநாடு' லிமிடெட் ஸ்தாபனத்தாரால் யாழ்ப்பாணம் சிவன் கோவில் மேற்கு வீதி. 63ம் இலக்கத்திலுள்ள அவர்களது அச்சகத்தில் 1990ம் ஆண்டு ஐப்பசி மாதம் 17-ம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது.

Registered as a News Paper at the General Post Office Sri Lanka under umber B/100306/81.

# ஓய்வூதியம் வழங்குவதற்கு வங்கியில் பணமில்லை

(பண்டத்தரிப்பு)

பண்டத்தரிப்பு ப. நோ. கூ. சங்கத்தின் கிராமிய வங்கியில் தங்கள் ஓய்வூதியம்பெற்று வந்த சுமார் 400 பேருக்குக் கடந்த ஆகஸ்ட் மாதத்திற்கான ஓய்வூதியப் பணத்தை வழங்குவதற்கு இவ்வங்கியில் பணம் இல்லை என்று அறிவிக்கப்பட்டுள்ளது.

மக்கள் வங்கியிலிருந்து கிராமிய வங்கிக்குப் பணம் கிடைத்தால் மட்டுமே ஓய்வூதியம் பெறுபவர்களுக்கு ஆகஸ்ட் மாதத்திற்கான ஓய்வூதியப் பணத்தை வழங்க முடியும் என்று இவர்களுக்கு அறிவிக்கப்பட்டுள்ளது.

தங்கள் ஓய்வூதியப் பணம் கிடைக்காது இவர்கள் மிகுந்த சிரமமடைவதாகவும், இதை இக்கிராமிய வங்கியில் இருந்து கடந்த காலத்தைப் போலப் பெறுவதற்கு ஆவன செய்து தருமாறும் பண்டத்தரிப்பு ஓய்வூதியம்பெறுவோர் கூட்டுறவுச் சங்கம் யாழ். அரசாங்க அதிபருக்குக் கடந்த வாரம் அனுப்பி வைத்துள்ள மகஜர் ஒன்றில் வேண்டுகோள் விடுத்துள்ளது. (72)

### வலி. வடக்கில்

[1-ம் பக்கத் தொடர்ச்சி]

துறைப் பகுதிகளில் ஹேலிகொப்டர்கள் ரோந்துசுற்றி கலிபர் தாக்குதலும், கிரனைட் தாக்குதலும் நடத்தின.

பிற்பகல் 2 மணியளவில்

[1-ம் பக்கத் தொடர்ச்சி]

பலாலியிலிருந்து வந்த அவ்ரோ விமானம் ஒன்று கட்டுவன் பகுதியில் முதலில் 5 குண்டுகளை வீசியது பின்னர் திரும்பவும் வந்து 5 குண்டுகளை வீசியது. பின்னர் 4-30 மணியளவில் காங்கேசன்துறை, மாவிட்டபுரம் பகுதிகளைச் சுற்றிய அவ்ரோ அப்பகுதிகளிலும் 4 குண்டுகளைப் போட்டது.

நேற்று முழுவதும் ஹெலி, பொம்மர், அவ்ரோ ஆகியவற்றின் மும்முனைத்தாக்குதலுக்கு இலக்கான மேற்படி பகுதிகளில் இருந்து மக்கள் ஏற்கனவே வெளியேறியிருந்தமையால் உயிர்ச்சேதம் எதுவும் ஏற்படவில்லை. (86)

# கடற்படை தாக்குதல் ஒருவர் பலி!

(மட்டுநகர்)

மட்டுநகர் கழுதாவளை துறைமுகத்திலிருந்து படகில் சென்ற பொதுமக்கள் மீது ஸ்ரீலங்கா கடற்படையினர் துப்பாக்கிப் பிரயோகம் செய்ததில் கணபதிப்பிள்ளை பூரணம் ]வயது 45) மரணமானுர்,

க. செல்வராணி(வயது 18), முத்தன் குணம் (வயது 16). கந்தப்பர் நடராசா (வயது 18) ஆகியோர் படுகாயமடைந்தனர். (வி)

### தென் பகுதியில்

(1ம் பக்கத் தொடர்ச்சி)

ரடிப்படையும், பச்சைப்புலிகளின் அத்துமீறிய நடவடிக்கைகள் அரசுக்கு பெருந்தலையிடியைக் கொடுத்து வருவதாகவும் அவ்வறிக்கையில் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

கடந்த இரண்டு ஆண்டுகளாக நடந்துவரும் பயங்கரவாத நிகழ்வுகளால் அஞ்சிவாழும் தென்பகுதி மக்கள் அரச அதிரடிப்படையினரை மரணப்படை என்று வர்ணிக்க அரசாங்கமோ கண்காணிப்புபடை என்று விளக்கம் அளித்து வருவதாகவும் அவ்வறிக்கையில் தெரிவிக்கப்படுகிறது.

## இருபஸ்கள் தீக்கிரை

(மட்டக்களப்பு)

மட்டக்களப்பில் இலங்கை போக்குவரத்துச் சபைக்குச் சொந்தமான இரு பஸ்கள் இனந்தெரியாதவர்களினுல் தீக்கிரையாக்கப்பட்டது.

## பாண் விலை அதிகரிப்பு

(கொக்குவில்)

மாவின் விலை அதிகரித்ததைத் தொடர்ந்து 7 ரூபாவாக விற்பனையாகிய பாண் தற்போது 8 ரூபாவாக் அதிகரிக்கப்பட்டுள்ளது. (135)

### ஈழத் தமிழ்

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

போது இம்மகஜர் புதுடில்லியில் அல்லது வேறொரு பகுதியில் வைத்துச் சமர்ப்பிக்கப்படலாம் எனவும் அக்கட்சி தெரிவித்துள்ளது.

இதேவேளை, இந்தியாவில் சுதந்திரத் தனிநாடு கோரிப் போராடிவரும் காஷ்மீர், பஞ்சாப் தீவிரவாதிகளும் அறிக்கைகள் வழங்க முயன்றுவருவதாகவும் அச்செய்தி தெரிவித்தது. (சி)